ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சீதக்காதி திருமண வாழ்த்தும் மு.இ அகமது மரைக்காயர் உரைத்திறனும்

Seethakathi Thirumana Vazhathum M.E. Ahmed Maraikayar Uraithiranum

முனைவர் பொன்.சண்முகம்

Dr. P. Shanmugam

முதல்வர் (பொறுப்பு)

மீனாட்சி அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

Meenakshi Ammal Arts And Science College

உத்தரமேரூர்-603 406

Uthiramerur- 603 406

Abstract

The contribution of Muslims to the Tamil language is immense. Saivites, Vaishnavites and Christians have been making beauty by distilling, interpreting and publishing many books. Today there is a change in the opinion of Tamil scholars. He has written and published many books which are yet to be published. In this regard, Professor M.E., who published the book ***'Seethakadhi Wedding Greetings'*** *sung in the 17th century and wrote an excellent speech. Ahmed Maraikayar is to be admired by the Tamil speaking world. The purpose of this study is to bring out the textual techniques and the sincerity of the interlocutor in the book Sitakati Wedding Greetings, the description, the language mixed with the illustrations, the ornaments, etc.*

Keywords: *Islam, discourse, Tamil language, publication, Seethakkathi wedding greeting*

ஆய்வுச் சுருக்கம்

இசுலாமியர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு மிகப் பெரியது. சைவர்கள், வைணவர்கள், கிறித்துவர்கள் பல நூல்களை வடித்தும் உரைசெய்தும் பதிப்பித்தும் அழகு செய்து வருகின்றனர். இன்றைக்குத் தமிழ் ஆய்வாளர்களின் பார்வையில் சற்று மாறுதல் ஏற்பட்டுள்ளது எனலாம். இதுவரை அறியப்படாத பல நூல்களைப் பதிப்பித்தும் உரை எழுதியும் அதை வெளிக்கொண்டு வருவதில் மிகு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். அந்த வகையில் 17-ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட "சீதக்காதி திருமண வாழ்த்து" நூலைப் பதிப்பித்துச் சிறப்பான உரையும் எழுதிய பேராசிரியர் மு.இ. அகமது மரைக்காயர் அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. சீதக்காதி திருமண வாழ்த்து நூலில் உள்ள உரை நுட்பங்களையும்,

உரையாசிரியரின் உரை நேர்மையையும், வருணனைகள் உவமைகள் கலந்த மொழிகள், அணிகலன்கள் போன்றவைகளை வெளியுலகத்திற்கு கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கம்.

திறவுச்சொற்கள்: இசுலாம், உரை, தமிழ்மொழி, பதிப்பு,சீதக்காதி திருமண வாழ்த்து

முன்னுரை

"சீதக்காதி திருமண வாழ்த்து" நூல் மொத்தம் 48 ஏடுகளைக் கொண்டது. 25 முதல் 31 வரையிலான ஆறு கண்ணிகள் எழுதப்பட்ட ஏடுகளும் 229 முதல் 448 வரையிலான ஆறு கண்ணிகள் எழுதப்பட்ட ஏடுகளும் இல்லை. 54,148,153,234, 235, 236 ஆகிய கண்ணிகள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. இந்நிலையில் இருந்த "சீதக்காதி திருமண வாழ்த்து" நூலின் 1996-ஆம் ஆண்டு பேராசிரியர் மு.இ.அகமது மரைக்காயர் அவர்கள் உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார். அகமது மரைக்காயரின் உரைத்திறனை உலகுக்கு வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும், இந்நூலை பதிப்பித்து உரை எழுதும் போது தனக்கு நேர்ந்த அனுபவங்களையும் இந்நூலில் அவர் பகிர்ந்துள்ளார்.

மகிழ்ச்சி-வருத்தம்

இந்நூலை பதிப்பித்து உரையுடன் வெளியிடும்போது தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் இவ்வாறு கூறுகின்றார். "பழைய பதிப்பில் கிடைக்காத 21, 22, 23, 24, 37, 38, 39, 40, 178, 179, 180, 181, 182, 183, 184, 297,298 ஆகிய பதினேழு கண்ணிகளும் முந்தைய பதிப்பில் சிதைந்துபோன 97, 105, 109, 112, 113, 114 ஆகிய கண்ணிகளும் புதிய சுவடியில் முழு அளவில் கிடைத்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி ஒரு புறம் இருக்க புதிய சுவடியில் 298-ஆம் கண்ணியோடு ஏடு முடிந்துவிடுவதால் பழைய பதிப்பில் கிடைக்காமல் விடுபட்ட 333, 334, 335, 366, 365, 367, 368 ஆகிய கண்ணிகளை 'நாம் பெற இயலாமல் போய் விட்டதே! என்ற வருத்தம் ஏற்பட்டு விட்டது. இந்தக் கண்ணிகள் காலப்போக்கில் கிடைத்துவிட்டால் "சீதக்காதி திருமண வாழ்த்து" நூல் முழுமையடைந்த நிலையில் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வாய்க்கும்" எனக் கூறுகிறார். இது அவரது மன உயர்வாக இருந்தாலும் இந்நூலைப் படிப்பவர்களையும் மிக நேர்த்தியாக எளிமையாகத் தனது உரையில் கூறியிருப்பது வாசகனுக்கு மனநிறைவு அளிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

உ.வே.சாமிநாத அய்யருக்குச் சிலப்பதிகாரத்தையும், சீவக சிந்தாமணியையும் பதிப்பித்து உரை எழுதி வெளியிட்டபோது என்ன அனுபவம் ஏற்பட்டதோ, அதே அனுபவம் இந்நூலைப் பதிப்பித்து உரை எழுதி வெளியிட்டபோது உரையாசிரியருக்கு ஏற்பட்டுள்ளது என்பதை 'என்னுரை' பகுதியைப் படிக்கும்போது அறிய முடிகிறது.

இந்நூல் **"சீதக்காதி திருமண வாழ்த்து"** என்ற பெயரில் அமைந்திருந்த போதும் இது வெறும் வாழ்த்துப் பாடல்களை மட்டும் உள்ளடக்கிய நூலாக இல்லாமல் அக்காலச் சமுதாயத்தைக் காட்டுகின்ற கண்ணாடியாகவும் திகழ்கிறது எனலாம். பேராசிரியர் அகமது மரைக்காயரின் உரை இஸ்லாமிய மக்கள் பயன்படுத்திய அணிகலன்கள், பொருட்கள் வழக்கிழந்து போன சொற்கள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நினைவு படுத்துவதோடு மீட்டுருவாக்கம் செய்வனவாகவும் உள்ளது.

உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் **"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்று உலக மக்கள் அனைவரையும் அறைகூவி அழைத்துப் புலமை விருந்தளித்த நல்லவர்கள். அறிவுச் செல்வத்தை அள்ளிச் சொரிந்த வள்ளல்கள். கல்விக் கோவிலைத் திறந்து விட்டவர்கள். இவ்வகையில் பேராசிரியர் அகமது மரைக்காயர் "சீதக்காதி திருமண வாழ்த்து" நூலில் மேற்கோளாகத் தரும் பாடல்கள் மூல நூலில் ஏற்படும் ஐயங்களை களையவும் பாட வேறுபாடுகளை அறிந்து பாடல்களின் பொருளைத் துணியும் பயன்படுகிறது. சில பாடல்களுக்கு உரையாசிரியர் மிக விரிவான உரையும் நயமிக்க விளக்கமும் எழுதியிருப்பதால் அவை இலக்கியப் பயிற்சிக்கு வழிகாட்டியாய் அமைகின்றன.

ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக்கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்கவழக்கம் இவை என்ற சமுதாய அறிவும் இருத்தல் வேண்டும். மேற்சுட்டப்பட்ட அனைத்து அறிவுக்கூறுகளும் பேராசிரியர் அகமது மரைக்காயரின் உரையில் காணக்கிடப்பதை இக்கட்டுரையில் காண்போம்.

உரைநடை என்பது படைப்பாளியின் பண்பு நலன்களை அறிவின் அகலத்தை, ஆழ்ந்த சிந்தனையைப் புலப்படுத்தும் ஒரு அடையாளமாகும். இக்கூற்றை மெய்ப்பிக்கும்வகையில் 'ஏர்கொண்ட் மைத்த இறையொருவனைப் பணிவாம்' என்னும் "சீதக்காதி திருமண வாழ்த்து" நூலின் அடிகளுக்கு உரையாசிரியர் அளித்துள்ள விளக்கம் இவ்வாறு அமைந்துள்ளது. இறைவன் ஒருவன் என்பது இசுலாத்தின் தத்துவம். 'ஒருவனே தேவன்' என்பது திருமூலர் வாக்கு. ஒரே இறைவனாகிய அல்லாவைப் பணிவோம் என்று விளக்குகிறார். திருமூலரின் கொள்கையையும் இசுலாத்தின் தத்துவத்தையும் ஒரே நேர்க்கோட்டில் உரையாசிரியர் நோக்குவதிலிருந்து சமய ஒற்றுமை உணர்வை வலியுறுத்தும் அவரின் கருத்தியலைப் புரிந்து கொள்ள முடிகிறது.

"முத்தொளியில் வந்த முகம்மதுற சூல் நபியை நித்தலுமே நெஞ்சில் நினைந்து துதிப்போமே"

இதன் பொருள் முத்துப்போன்ற ஒளியிலிருந்து தோன்றிய முகம்மது அவர்களை ஒவ்வொரு நாளும் உள்ளத்தில் நினைத்துப் போற்றுவோம் என்பதாகும். இதற்கு மேலும் விளக்கவுரையாக முகம்மதுநபி அவர்கள் இறைவனது பேரொளியிலிருந்து தோன்றினார். ஆதலால் முத்தொளியில் வந்த முகம்மது என்கிறார் உரையாசிரியர். இறசூல் என்ற அரபிச்சொல்லுக்கும் நபி என்ற அரபிச் சொல்லுக்கும் சிறந்த விளக்கம் தந்துள்ளார்.

வருணனை நடை

தோற்றம், இடம், சூழல், பொருள், இயற்கை இவற்றை மிகைப்படுத்திக் கூறுவது வருணனை எனப்படும். இலக்கியத்திற்கு வருணனை என்பது இன்றியமையாதது. புலன் உணர்வு மூலம் ஏற்படும் அனுபவங்களை வருணித்துக் காட்டும் உரைநடையை வருணனை உரைநடை எனலாம். மனிதர்களையும், பொருள்களையும், தெய்வங்களையும் வருணிக்கும்போது படிப்போரின் உணர்வுகளைத் தட்டியெழுப்பும் ஆற்றல் இதற்கு உண்டு. இவ்வகையில் உமறு அவர்களை வருணிக்கிறார். "விண்ணைப் பார்த்து உலவிக் கொண்டிருக்கும் வெம்மையான கதிரவனின் மேனியையே கறுக்கச் செய்கின்ற சினப்பார்வையினைக் கொண்ட சிவந்த தாமரை மலர்போன்ற கண்களையுடைய அருளாளர் உமறு என்று கூறுகிறார்.

உவமைகள் கலந்த மொழிநடை (உரை)

“ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து ஒப்புமைத் தோன்ற செப்புவது உவமை"

என்பது உவமையின் இலக்கணமாகும். "சீதக்காதி திருமண வாழ்த்து " நூலில் பல இடங்களில் உரையாசியர் உவமைகளை கையாண்டுள்ளார்.

சான்றாக, "கார்முகிலைப் போன்றவரும், சருக்கரைபோன்ற இனிய அருள் மழையைப் பொழிய வந்தவரும், பெருமேகமாய்த் திகழ்பவருமாகிய வாவா லெவ்வை அவர்களின் தேன் மலர் போன்ற பாதங்களை தொழுவோம்" என்று கூறுகிறார். இவ்உவமைகள் இந்நூலைப் படிக்கும் வாசகனுக்கு மேலும் மேலும் படிக்கத்தூண்டும் வகையில் அகமது மரைக்காயர் அவர்களால் படைக்கப்பட்டுள்ளது. உரையாசிரியர் பல இடங்களில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறாத பல வரலாற்றுக் குறிப்புகளையும் தனது உரையில் பதிவு செய்துள்ளார்.

"சதக்கத்துல்லா அப்பா அவர்கள் தமிழ்நாட்டில் தோன்றிய மாபெரும் மார்க்கஞானி ஆவார். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு மார்க்க அறிவூட்டியவர். உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதுவதற்கு உரை கொடுத்தவர். இவர் இயற்றியுள்ள ஞான நூல்கள் ஏராளம். அவற்றுள் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது நபிகள் நாயகம் அவர்கள் மீது பாடியுள்ள வித்ரியா

எனப்படும் புகழ்மாலையாகும். இந்நூலின் பாட்டுடைத் தலைவராகிய சீதக்காதி, சதக்கத்துல்லா அப்பா அவர்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். காயற்பட்டினத்தில் பிறந்த சதக்கதுல்லா அவர்கள் கீழக்கரையில் மறைந்தார் என்று கூறுகிறார். இதுவரை அறியப்படாத பல இசுலாமிய புலவர்களைப்பற்றியும், இலக்கியங்களைப் பற்றியும் உரையாசிரியர் கூறுகிறார். இவற்றைப் போலவே சேகாலி லெவ்வை அவர்களைப் பற்றியும் கூறுகிறார். இவர் இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுக்கு உரைகொடுத்தவர் என்று கூறுகிறார். இன்று வழக்கற்றுப்போன அக்காலத்தில் இருந்த பல பெயர்களை இவரின் உரையின் மூலம் அறியமுடிகிறது

அதாவது கீழக்கரைக்கு அணுத்தொகை மங்கலம் காயல், காயல் துறை, காயல் நகர், கிற்கிராப்பட்டினம், கிற்கிரி, கேலிக்கரை, கொற்கை, செம்பிநாடு, தென்காயல், நினைத்தது முடித்தான் பட்டினம், பௌத்திர மாணிக்கப் பட்டினம், வச்சிரநாடு முதலிய பெயர்கள் இருந்ததாகக் கூறுகிறார். மறைந்து போன பெயர்களைத் தேடிக்கண்டுபிடித்து தனது உரையில் கூறியிருப்பது தமிழ் உலகிற்கு பயன் அளிக்கும் என்றால் அது மிகையாகாது. பல கீழக்கரைக்குத் தமிழ்க்காயல் என பெயர்வரக் காரணம் தமிழ்ப்புலவர் பெருமக்கள் வாழ்ந்த நகரமாதலால் இப்பெயர் வந்தது எனக் கூறுகிறார். இனி தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும் போது கீழக்கரையையும் நினைவில் வைத்து எழுதவேண்டும். மதுரையில் புலவர்கள் ஒன்று கூடித் தமிழை வளர்த்ததுபோல் கீழக்கரையிலும் புலவர்கள் பலர் தமிழ் நூல்களை இயற்றி தமிழை வளர்த்துள்ளனர். இன்றைய தலைமுறை ஆய்வாளர்கள் இது குறித்து- ஆய்வுசெய்யத் தூண்டும் வகையில் உரையாசிரியரின் உரையில் இச்செய்தி இடம் பெற்றுள்ளது.

"சீதக்காதி திருமணவாழ்த்து" நூலில் இடம் பெற்றுள்ள கற்பனைக்கு மேலும் அழகு செய்விக்கும் வகையில் அகமது மரைக்காயரின் உரைநடையும் அமைந்துள்ளது.

“தேனைத் தகர்திடையே திங்கட்கோட்டாலுழக்கு வானைத் தடவும் மணிமரகதக்கிரியான்"

இதன் பொருள் பிறைத் திங்களின் நுனியானது தேனடையை உழுது அழிக்கும் வகையில் விண்ணை முட்டுகிற அளவுக்கு உயர்ந்து விளங்கும் மரகதமணிகள் நிறைந்த மலையை உடையவர் சீதக்காதி என்பதாகும். உரையாசிரியர் இதன் பொருளை தனது உரைத்திறமையால், "மலை உயர்ந்து நிற்பதால் அதிலுள்ள தேனடைகளை விண்ணில் உலவும் இளம் பிறையின் நுனியானது உழுது தகர்த்தது" என்று கூறுகிறார். அதோடு இதுபோன்ற கற்பனைக்காட்சி

"குழவி வெண்மதிக்கோடுழக்கீண்டுதேன் குழவினின்றெதிர் மெய்வரைச் சென்னி யிலிழியும்"

என்று சீவக சிந்தாமணி பாடலோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

முத்துகள் எந்த எந்த பொருள்களிலிருந்து, உயிர்களிலிருந்து தோன்றும் என்பது பற்றிய மிக நுணுக்கமான இதுவரை அறியப்படாதசெய்திகளைத் தமது உரையில் உரையாசிரியர் பட்டியல் இடுகிறார். மதி, மேகம், சங்கு, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக் கொம்பு, பன்றிக் கொம்பு, பசுவின் பால், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து ஆகிய இடங்களிலிருந்து முத்துக்கள் பிறக்கும் என்று கூறுகிறார்.

அணிகலன்கள்

அணிகலன்களை நேர்த்தியாகச் செய்வதிலும் அழகுற அணிவதிலும் தமிழர் ஈடுபாடுமிக்கு விளங்கினார். பொன்னால் வேலைப்பாடு மிகுந்த அணிவகைகள் பலவற்றை ஆக்கிப் பயன்படுத்தினர். அணிகலன்கள் பொன், வெள்ளி, முத்து, மணி முதலிய கருவிகளும் தேர்ந்த பொற்கொல்லரும் பண்டைத் தமிழகத்தில் இருந்தனர். "சீதக்காதி திருமணவாழ்த்து" நூலில் மணப்பெண் அணிந்திருந்த அணிகலன்களைப் பட்டியலிடுகிறார் உரையாசிரியர். அவை பதுமராகம், மரகதம், வைரம், நீலம் ஆகிய மணிகள் பதிக்கப்பெற்ற சுட்டியினையும், மணிகள் பதிக்கப்பட்ட அலுக்குத்து, மரகதத்தால் ஆன பூன்கொப்புமணி, அழகிய கலுக்கியா ஆகியவற்றோடு அரசிலைப் பூத்தொங்கலையும், (அலுக்குத்து என்பது காது மடல்களில் சிறுசிறு இடைவெளிவிட்டு நெருக்கமாக அணிகின்ற அணிவகை) வைரத்தால் ஆகிய ஒன்னப்பூவையும் (காதுகளில் அணிவது) அசரவி என்னும் காசுமாலையும் தும்பிப் பதக்கத்தையும், ஒளிவீசும் கிளிப்பதக்கத்தையும் சிங்கமுகம் பொறிக்கப் பட்ட தாலிவில்லையையும் கொத்துவடம் என்னும் கழுத்துச் சங்கிலியையும், அட்டிலையும், இரத்தினசரி, சந்துக்காறை ஆகிய வளையல்களையும், அதோடு பொன் மணியையும் மரகதம் பதிக்கப்பட்ட பொற்கடகத்தையும் கால்களில் கட்டுசரம், பொன்னாலாகிய பீலி, காலாழி ஆகியவற்றையும் மணப்பெண் அணிந்திருந்தாள் என்று கூறுகிறார். மேற்சுட்டப்பட்ட அணிகலன்களில் ஒருசிலவற்றைத் தவிர மற்றவை இன்று மறைந்து விட்டன எனலாம். மறைந்து போன அணிகலன்களின் பெயர்களை அறிவதற்கு உரையாசிரியரின் உரை பேருதவியாக இருக்கிறது.

தொகுப்புரை

இந்நூலின் உள்ள பல பாடல்கள் சிதைந்த நிலையில் பொருள் அறிந்துகொள்ள இயலாத வகையில் இருக்கிறது. இப்படிப்பட்ட பாடல்களுக்கு வலிந்து பொருள் கொள்ளாமல் பொருள் விளங்கவில்லை என்று எழுதியுள்ளார். இது உரையாசியரின் நேர்மைக்குச் சான்றாகும். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களை உ.வே.சாமிநாத அய்யர், நா.மு வேங்கடசாமி நாட்டார் போன்றவர்களின் உரை இல்லையென்றால் படித்துப்புரிந்து கொள்வது சிரமம். அதுமட்டுமல்லாமல் அக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், ஆடை, அணிகலன்கள், நம்பிக்கைகள். வழிபாடுகள், கலைகள் முதலியவற்றை அறிந்து கொள்வதற்கு இவர்களின்

உரைகள் பேருதவியாக இருக்கின்றன. அதைப்போல் "சீதக்காதி திருமணவாழ்த்து" நூலையும், அந்நூல் வெளிப்படுத்தும் 17-ஆம் நூற்றாண்டு மக்களின் வாழ்வியலையும் பேராசியர் அகமது மரைக்காயரின் உரையின்றிப் புரிந்து கொள்ள இயலாது எனலாம்.

துணைநூற் பட்டியல்

1. சீதக்காதி திருமணவாழ்த்து., முதற்பதிப்பு, அபுபக்கர் பதிப்பகம், காரைகால் 1956.
2. மு.வை. அரவிந்தன்., உரையாசிரியர் திறம், முதற்பதிப்பு, சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1997.
3. டாக்டர் உ.வே.சாமிநாதையர்., குறுந்தொகை மூலமும் உரையும், ஏழாம் பதிப்பு, உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-2018.

Bibliography

1. *Seethakkathi Thirumanavazhthu* (Wedding Benediction for Seethakkathi), First Edition, Abubacker Publications, Karaikal, 1956.

2. M.V. Aravindan, *Uraiasiriyar Thiram* (The Prowess of Commentators), First Edition, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, 1997.

3. Dr. U.V. Swaminatha Iyer, *Kurunthogai: Moolamum Uraiyum* (Kurunthogai: Original Text and Commentary), Seventh Edition, U.V. Swaminatha Iyer Library, Chennai, 2018.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com